1. பொய்கையாழ்வார்

திருமாலின் சங்கே திருத்தாமரை பொய்கையே
திருச்செவ்வாய் தினமே ஐப்பசி திங்களே
திருவோண நாளிலே திருஅவதாரம் செய்தாரே
திருஅந்தாதி அருளியே  திருவிளக்கு ஏற்றினாரே

வையகம் தகளியாக வார்கடல் நெய்யாக
ஐயனவர் பாட்டிலே அண்டமே ஒளிர்ந்ததே
அறியாமை இருள்நீங்க அறிவொளி மிகுந்ததே
அறிவுச் சுடராலே அன்பெங்கும் பொங்கியதே

இடராழி நீங்கிடவே இன்னலும் போயிடவே
சுடராழி இறைக்கவர் சூட்டிய சொன்மாலையே
அடக்கிய புலன்களிலே ஆன்மாவும் தெரிந்ததே
சடங்கின் பொய்யகன்று  சரணாகதி பிறந்ததே

எனக்கும்  இடம் உண்டோ எனக்கேட்டு வந்தவரே
உனக்கும் உண்டென்று ஊருக்குமிடம்  தந்தாரே
சோதி வடிவாய் ஜொலித்த  நாராயணனே
பீதிகளை போக்குவாயே  அமைதியை அளிப்பாயே

2. பூதத்தாழ்வார்

அளிக்கும் கரமே அரவணைக்கும் அன்பே
எளிதான பாசுரமே எண்ணத்தில் எழுமே
அன்பே தகளியே ஆர்வமே நெய்யே
இன்புருகு சிந்தையே எழிலான சுடரே

ஐப்பசி அவிட்டமே ஆண்டவனின் தண்டாயுதமே
வையகம் வந்ததே வகைவகையாய் பாடியதே
அன்பை உரைத்ததே அனுதினம் துதித்ததே
மன்பிறவி பாக்கியமே மனதாரப் பாடுவோமே

திருப்பாற்கடலே திருவேங்கடமே திருத்தலங்கள் பலவே
திருவந்தாதி பாடியே திருக்கோவிலூர் வந்தாரே
திருஆழ்வார்கள் சந்திக்க திருமாலும் வந்தாரே
திருக்கோவிலூர் இடகழியே இடர்களை நீக்குமே

வந்தாரை வாழ வை  வையகம் தழைக்க வை
செந்தாமரை மணாளனே சித்தம் குளிர வை
இன்னல்கள் நீங்கிட இடர்கள் தொலைந்திட
உன்னையே சரணம் உளமார அடைவோமே

3. பேயாழ்வார்

அடைக்கலம் நீயென்று அரங்கனைப் பணிந்தாரே
கடைக்கண் அருளுக்காக அந்தாதி பாடினாரே
இடகழியில் ஆழ்வார்களை இனிதாய் சந்தித்தாரே
தடையகல பாமாலை தரணியில் தொடுத்தாரே

சதயத்தில் உதித்து சங்கடங்கள் தீர்த்தாரே
உதயமாய் செவ்வல்லிப் பூவிதழில் தவழ்ந்தாரே
திருமாலின் நந்தகவாள் திருமயிலையில் பிறந்தாரே
திருமழிசை மதம்மாற திருவருள் செய்தாரே

திருக்கோவிலூர் தலத்தில் திருஉருவம்  கண்டாரே
திருப்பொன் மேனிகண்டு திருவருள் பெற்றாரே
திருத்தலங்கள் பலவற்றில் திவ்யமான அந்தாதியே
திருமகள் பெருமையுடன் திகட்டாத இனிமையே

பேயனென்ற பெயருடன் பெருநிலத்தில் வாழ்ந்தாரே
மாயன் திருமாலை மறவாது துதித்தாரே
காயத்தைக்  காத்திடும் கருப்பொருள் விஷ்ணுவே
மாயக்கடலின் படகோட்டி மகத்தான விஷ்ணுவே

4. திருமழிசை ஆழ்வார்

விஷ்ணுவின் அருள்பெற்ற திருமழிசை தலத்திலே
விஷ்ணுவின் அருளால் விழித்த பிண்டமே
பிராட்டி முலைப்பாலிட ஞானமும் பெற்றாரே
பெருவிரலில் பால்சுரக்க பெருமாளும்  அருளினாரே

சிவத்தொண்டு செய்தபடி சிவவாக்கியாராய் வாழ்ந்தாரே
அவருக்கு  பேயாழ்வார் அருளுரை செய்தாரே
திருவெஃகா தலத்தில் திருத்தொண்டு செய்தாரே
திருத்தலத்தில் அந்தாதி திகட்டாது இயற்றினாரே

வேலைசெய் மூதாட்டி இவரருளால் இளமை பெற்றாரே
சேவைசெய் கணிகண்ணன் சிந்தை மகிழ்ந்தாரே
இதைக்கேட்ட மன்னனும் இளமை கேட்டானே
அதைக் கொடுக்க கணிகண்ணன் மறுத்து விட்டானே

நாடு கடக்க நாயகன் ஆணை யிட்டானே
நாடு கடக்க ஆழ்வாரும் நடை போட்டாரே
நாடு கடக்க சயனித்த பெருமாளும் எழுந்தாரே
நாடு கடந்து மூவரும் நலமாய் சென்றனரே

மக்களும் மன்னனும் மன்னிப்பு கேட்டாரே
அக்கணம் ஆழ்வார் ஊருக்கு திரும்பினாரே
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

நாடு கடக்க சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

5. நம்மாழ்வார்

பெருமாளே புத்திரனாகி பேசாது இருந்தாரே
குறுங்குடி கோவிலில் குழந்தையாய் வளர்ந்தாரே
விந்தைக் குழவியாய் வாய்திறவா திருந்தாரே
பொந்திலே அமர்ந்து புளியமரத்தில் தங்கினாரே

பதினாறு வருடங்கள் மௌனம் காத்திட
அதிசயம் கண்டங்கு மதுரகவி வந்தாரே
எத்தை தின்று எங்கே கிடக்குமென கேட்க
அத்தை தின்று அங்கே கிடக்குமென்றாரே

சித்தை உணர்ந்த சித்தத்தை அறிந்து
முத்தான பாசுரங்கள் முன்னின்று பாட
ஆசான் பாடியதை அடியவர் எழுத
பேசாது பேசியதில் பிறந்ததே பாமாலை

சங்கப் பலகை தாங்கிய பாசுரமே
மங்காத புகழுடன் மாறாத சுவடுகளே
சங்காய் ஊதியே சாத்திரம் பாடுமே
எங்கும் தங்கும் எழிலான பூரணமே

6. மதுரகவியாழ்வார்

பூரணத்தைப் பூரணமாய் உணர்ந்த பூரணமே
காரணக் கருத்தை கண்டுகொண்ட கவியே
தோரணமாய் பாசுரங்களைத் தொகுத்த மதுரமே
நாரணனை நம்மாழ்வாரை நம்பியே நின்றவரே

சித்திரை திங்கள் சித்திரையில் அவதாரமே
சித்தையும் சத்தையும் நித்தம் காணவே
வித்தான ஜோதியை விழிகண்டு நடக்க
சத்திய குருவை பொந்திலே கண்டாரே

ஆசார்யன் புகழை அகிலம் அறியவே
ஆசார்ய பாசுரங்கள் பாடியே சென்றாரே
கண்ணன் கழலிணை வைகையைக் கடக்க
மண்ணிலே சங்கம் மன்றாடி புகழ்ந்ததே

பன்னிரெண் டாயிரம் முறை பாசுரம் பாடவே
கண்ணெதிரே நம்மாழ்வார் காட்சியும் கொடுப்பாரே
கண்ணி நுண் சிறுத்தாம்பு பாடி நாம் நின்றால்
மண்ணிலே வருமே மகத்தான விண்ணகரமே

7. குலசேகர ஆழ்வார்

விண்ணகர வேந்தனை வேண்டி நின்ற வேந்தனே
மண்ணாளும் அரசனாய் மகவாய் வந்து பிறந்தாரே
கண்ணுக் கினிய குழவியாய் மாசிமாதம் உதித்தாரே
அண்ணல் போலவே அவதரித்த திருநாள் புனர்பூசமே

கேரளத்து கொல்லியிலே காவலும் இருந்தாரே
சேரநாட்டு மன்னனாய் செழிப்புடன் வாழ்ந்தாரே
வீரமுடன் அரசாண்டு வெற்றிகள் பல குவித்தாரே
தீரனாய் பந்தங்களை விட்டுவிட துணிந்தாரே

நாளும் இராமன் கதையை நயமாய்க் கேட்பாரே
ஆளும் மன்னனாய் சீதையை மீட்க கிளம்பினாரே
மந்திரிகள் எடுத்துரைக்க மனமுணர்ந்து கொண்டாரே

இந்திரியங்கள்  வென்று இத்தலத்தில் வாழ்ந்தாரே

பொன்னை ஒளித்து பொய்யுரைத்தனர் மந்திரிகளே
முன்னம் அரவத்தை பானையில் வைக்கச் சொன்னாரே
மன்னனும்  தன்கரத்தை அதற்குள் விட்டு விட்டாரே
உண்மை அதனால் தானாக ஊருக்குத் தெரிந்ததே

பதவியைத் துறந்து பாசுரம் பாடத் துவங்கினாரே
விதவித பாசுரங்கள் மனம் லயித்துப்  பாடினாரே
திருவேங்கடப்  படியாக  திருமாலிடம் கேட்டாரே
திருக்கோவில் படியாக குலசேகரன் திகழ்வாரே

8. பெரியாழ்வார்
திகழும் திருமார்பில் திருப்பதக்க பல்லாண்டே
அகமகிழ துதித்த அரங்கனின் திருப்பல்லாண்டே
இகபர வாழ்வில் இறைவனுக்கே பல்லாண்டே
பகர்திரு ஆழ்வாரே பெரியாழ்வ பல்லாண்டே

வில்லிப்புத்தூர் வீதிகளில் விஷ்ணுசித்த பல்லாண்டே
அல்லும்  பகலும் அரங்கனின் பல்லாண்டே
பாண்டியனின் ஐயம்தீர்த்த பாஞ்ஞசன்ய பல்லாண்டே
ஆண்டவனின் அருளாலே ஆலயமனைத்திலும் பல்லாண்டே

பட்டத்து யானையில் பவனிவர பல்லாண்டே
மட்டிலா பெருமாள் வானத்தில் பல்லாண்டே
கருடத்தில் பறந்து கணத்தில் பல்லாண்டே
தருணத்தில் காட்சி தந்தாரே பல்லாண்டே

தோட்டத்தில் கண்டெடுத்த  துளிர்கோதை பல்லாண்டே
வாட்டங்கள் நீங்கிட வளர்த்தவர் பல்லாண்டே
அள்ளும் அரங்கனழகை  ஆராதித்துப் பல்லாண்டே
பிள்ளைத்தமிழ் பாடிய  பேரானந்த பல்லாண்டே

பெற்றவர் போலவே பாசுரங்கள் பல்லாண்டே
கற்றவர் மதியைக்  கவர்ந்திடும் பல்லாண்டே
உற்றவன் அவனே உவகையுடன் பல்லாண்டே
சுற்றம் காக்க வாழி வாழி பல்லாண்டே

9. ஆண்டாள்
பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் பெண்பிள்ளையே
வில்லிப்புத்தூர் துளசியாய் விஷ்ணுசித்தர் மகளே
அல்லும் பகலும் அரங்கனைத் துதித்தவளே
சொல்லின் செல்வியாய் செவ்வனே நின்றவளே

சூடிய மாலையை சூட்டிடக் கொடுத்தவளே
பாடிய பாசுரங்களில் பக்தியைச் சொன்னவளே
கனவிலே கண்ணனை கடிமணம் கொண்டவளே
நனவிலே அதுவும் நடந்திடச் செய்தவளே

மார்கழி நோன்பிருந்து மாதவனைத் தொழுதவளே
ஆர்க்குமின் நோய் அறியா துரைத்தவளே
பார்வியக்க திருமணம் பரந்தாமன் செய்திடவே
ஊர்விட்டு திருவரங்கம் உற்சாகமாய் வந்தவளே

திருப்பாவை செப்பிய திருமகள் ஆண்டாளே
திருவரங்கன் இதயத்தை திடமாய் ஆண்டவளே
கருத்திலே கண்ணனைக் காதலாய் கொண்டவளே
உருவத்தில் எழிலாய் உலகை ஆண்டவளே

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார்
ஆண்டு அனைத்தையும் ஆக்கும் அரங்கனே
வேண்டியதை வழங்கும் வித்தகன் ரங்கனே
சிந்தையில் ரங்கனை சிந்தித்த விப்ரனே
அந்தணர் குலத்தில் அவதரித்த ஆழ்வாரே

நந்தவன மலர்களால் நாளும் பூஜித்தவரே
அந்தரங்க தூய்மையில் அரங்கனைக் கண்டாரே
தேவதாசி அழகான தேவதேவி கண்டாளே
பாவத்தை தூண்டிட சபதமும் கொண்டாளே

மயக்கியே விப்ரனை மோகிக்க வைத்தாளே
கலக்கத்தில் ரங்கனை மறந்து நின்றாரே
வேசியின் வீடே விதியென நின்றாரே
ஏசிடும் சொல்லில் ஏளனமும் கொண்டாரே

பக்தனுக்கு உதவ பகவானே வந்தாரே

சுத்தோக பாத்திரம் சொத்தாக தந்தாரே
கோவில் பாத்திரம் களவாடிய குற்றத்திலே
காவலில் விப்ரனும் வைக்கப் பட்டானே

மன்னரின் கனவிலே உண்மையைச் சொன்னாரே
மன்னர் உரையை விப்ரனும் கேட்டாரே
அரங்கனை மறந்ததை அறிந்து துடித்தாரே
அரங்கனே எல்லாமென தொண்டரடிப் புகுந்தாரே

11. திருப்பாணாழ்வார்
புகுந்து உள்ளத்தை புலரவைக்கும் ஞானமே
அகத்தில் மலரும் அறிவொளி ஞானமே
இகபரத்தில் ஏற்றதாழ்வு இல்லாத ஞானமே
அகர உகர மகர ஆனந்த ஞானமே

கார்த்திகை மாதத்தில் உதித்த பாணரே
பார்த்திராது அரங்கனை பாடிநின்ற பாணரே
கருவறைக்குள் நுழையாது கண்ணிலே கண்டவரே
உருவத்தை கருத்தில் உளமாரக் கண்டவரே

கண்முடி மனமயங்கி கண்ணனைத் தொழுதவரே
அண்ணன்  சாரங்கன் கரவொலி கேளாதவரே
கல்விட்டெறிய உடனே கணத்தில் நகர்ந்தவரே
நில்லாது சாரங்கன் நீர்பிடித்து சென்றாரே

கல்பட்டு அரங்கனுக்கு காயம் ஏற்பட்டதே
சொல்லொணா துயரில் உத்திரம் பெருகியதே
பாணரை சுமக்கவும் ஆணை பிறந்ததே
பாணரை சாரங்கன் சுமந்து சென்றாரே

சாதிகுல இலதின்றி சத்தியம் நின்றானே
ஆதிவடிவ பூரணமாய் அரங்கனும் ஜொலித்தானே
ஓதிய பாசுரங்களில் ஒய்யாரம் கூடியதே
ஜோதியில் கலந்திட சித்தம் குழைந்ததே

12. திருமங்கை ஆழ்வார்

குழையும் செந்தமிழில் கும்பிட்ட ஆழ்வாரே
அழைத்திட  ஓடிவந்த ஆண்டவன் திருமாலே

இழையும் நூலாய் இவ்வுலகில் வினையறுக்க
மழையாய் பொழியும் கருணையே திருமாலே

கள்ளனாய் காமுகனாய் கலியுலகில் பிறந்தாரே
உள்ளத்தை குமுதவல்லிக்கு உருகியே அளித்தாரே
மெல்ல மெல்ல அவளும் மெருகேற்ற பக்தியில்
அல்லும் பகலும் அன்னதானம் தொடர்ந்ததே

ஒவ்வொரு நாளும் ஓயாது அன்னதானம்
செவ்வனே செய்யவே  கட்டாதது கப்பமே
சிறையில் அடைக்க சிந்தையில் வரதனே
அறையில் வரதன்  அன்புடன் ஆட்கொண்டாரே

களவாடி தானமளித்து கர்மத்தைத் தொலைத்தாரே
களவாட திருமாலே திருமகளுடன் வந்தாரே
தெய்வத்தை அறியவும்  திருவிளையாட்டு நடந்ததே
தெய்வமே நெஞ்சினை களவாடிச் சென்றதே

திருமந்திரம் உரைத்து திருவருள் செய்தாரே
திருமங்கை ஆழ்வார் திருவடி பணிந்தாரே
திருப்பாசுரங்கள் பலபாடிய  திவ்ய தேசங்களே
கருத்துடன்  தொழுதிட அருள்வாய் திருமாலே

ஆழ்வார் திருவடிகளே சரணம்!